RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING   மாலை நாளிதழ்




சிவகங்கை   மலர்-4   இதழ்- 261   செப்டம்பர்.22 2025 திங்கள்கிழமை   malaithanthi2020@gmail.com   4 பக்கங்கள்   விலை ரூ.5

# செப்.23ல் ஸ்டாலின் தலைமையில் திமுக எம்.பி, எம்எல்ஏ.,க்கள் கூட்டம்

## துரைமுருகன் அறிவிப்பு

சென்னை: செப்.22-

செப்.23ம் தேதி திமுக தலைவர் மு.க.ஸ்ஸ்டாலின் தலைமையில் கட்சியின் எம்.பி, எம்எல்ஏ.,க்கள் கூட்டம் நடைபெறும் என பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக துரைமுருகன் இன்று வெளியிட்ட அறிக்கையில், "திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில், திமுக மக்களவை மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், 23.09.2025 செவ்வாய் கிழமை, காலை 10.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயம், முரசொலி மாறன் வளாகத்தில் உள்ள கூட்ட அரங்கத்தில் நடைபெறும்.




அதுபோது, திமுக மக்களவை மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

கடைசியாக, கடந்த ஜூலை 18ம் தேதி, நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் தொடங்கும் முன்னர் திமுக எம்.பி.க்கள் கூட்டம் நடைபெற்றது. அதன்பிறகு இப்போது எம்.பி, எம்எல்ஏ.,க்கள் கூட்டம் நடைபெறுகிறது.



# கோவையில் 10 தொகுதிகளிலும் தே.ஜ. கூட்டணி வெற்றி பெறும்: வானதி சீனிவாசன் நம்பிக்கை

கோவை, செப்.22-

சட்டப்பேரவை தேர்தலில் கோவையில் 10 தொகுதிகளிலும் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும். என, பாஜக எம்எல்ஏ வானதி சீனிவாசன் தெரிவித்தார்.

கோவை செட்டி வீதியில் இன்று நடந்த 'நலம்' மருத்துவ முகாமில் கலந்து கொண்ட அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

நரேந்திர மோடியின் 75வது பிறந்தநாளை முன்னிட்டு இரண்டு வார காலம் நாடு முழுவதும் மக்களுக்கு பல்வேறு சேவை நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. கோவை தெற்கு தொகுதியில் 43வது மருத்துவ முகாம் நடத்தப்படுகிறது. இந்நிகழ்வை அருகில் உள்ள அரசுப் பள்ளி, சமுதாய கூடங்களில் நடத்த அனுமதி கோரியும் அனுமதி வழங்கப்படுவதில்லை. மரக்கன்று நடுதல் உள்ளிட்ட நாங்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் வெளியே தெரியக்கூடாது என்பதற்காக ஆளுங்கட்சியினர் தொடர்ந்து பல்வேறு வகையில் நெருக்கடிகளை தருகின்றனர்.

ஆனால் மக்களை ஏமாற்ற முடியாது. சட்டப்பேரவை தேர்தலில் கோவையில் 10 தொகுதிகளிலும் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெறும். குடிநீர் 12 நாட்களுக்கு ஒரு முறை மட்டுமே விநியோகிக்கப்படுகிறது. காரணம் கேட்டால் சிறுவாணி அணையில் நீர் இல்லை என கூறப்படுகிறது.

அணையை தூர்வார, நீர்மட்டத்தை அதிகரிக்க திமுக கூட்டணியில் உள்ள காங்கிரஸ் அரசு ஆளும் கேரளாவில் பேச்சுவார்த்தை நடத்துவதில் என்ன தயக்கம். நீண்ட கால பிரச்சினைகளுக்கு தீர்வு குறித்து திமுக அரசு யோசிப்பதே இல்லை.

எடப்பாடி பழனிசாமியுடன், நயினார் நாகேந்திரன் சந்திப்பு 2026ல் திமுகவை வீட்டிற்கு அனுப்ப வேண்டும் என்ற ஒன்று மட்டும் தான் ஒற்றைக் குறிக்கோள். திமுகவிற்கு எதிராக உள்ளவர்கள் அனைவரும் ஒரே அணியில் சேர வேண்டும் என்பது தேசிய ஜனநாயக கூட்டணியின் எண்ணம்.

தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜய் புதிதாக அரசியலுக்கு வந்து உள்ளதார். அரசியலுக்கு யார் வேண்டுமானாலும் வரலாம். மக்களுக்கு சேவையாற்றும் உயர்ந்த எண்ணம் கொண்ட அனைவரும் அரசியலுக்கு வரவேண்டும் என்பது தான் எங்களின் நோக்கம். விஜய் பேசும் விஷயத்தைப் பற்றி முழுமையாக படித்து தெரிந்து விட்டு பேச வேண்டும். வெட்கிரைண்டர்களுக்கு ஜிஎஸ்டி வரி குறைப்பது தொடர்பாக தொழில் அமைப்பினருடன் ஆலோசனை கூட்டம் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அண்ணாமலை உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். சென்னை கூட்டத்தில் அவரை சந்தித்து பேசினேன். கோவையில் நடைபெற்ற கட்சி நிகழ்ச்சிக்கு மாவட்ட நிர்வா கம் உள்பட அனைத்து தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது.

வாக்காளர் பட்டியல் பெயர் நீக்கம் தொடர்பாக முறைகேடு நடந்திருப்பதாக காங்கிரஸ் கட்சியினர் வரும் நிலையில் அவர்களிடம் ஆதாரங்கள் இருந்தால் அவற்றை கொண்டு தேர்தல் ஆணையத்தில் முறையிட வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# 'விஜய் அரசியலுக்கு வந்தார்; அரசியலில் இருந்த முதல்வர் ஷூட்டிங் சென்றார்' - தமிழிசை

மதுரை, செப்.22-

விஜய் அரசியலுக்கு வந்த நிலையில், அரசியலில் இருந்து தமிழக முதல்வர் ஷூட்டிங்கிற்கு சென்றுவிட்டார் என, பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்திராஜன் விமர்சனம் செய்தார்.

முன்னாள் ஆளுநரும், பாஜக மூத்த தலைவர் தமிழிசை சௌந்தரராஜன் சென்னையிலிருந்து விமானம் மூலம் மதுரை வந்தார். அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: ஜிஎஸ்டி மறு சீரமைப்புக்கு வரவேற்பு தெரிவிக்கிறேன். பாஜக அதிமுக கூட்டணி பலமாக உள்ளது. காங்கிரஸ் திமுக விடுதலை சிறுத்தைகள் கூட்டணியின் அங்கீகாரம் போய்விட்டது. மக்கள் நீதி மையம், கொங்கு கட்சி, ஜவாஹிருல்லா கட்சிக்கு அங்கீகாரம் இல்லை. எங்களைப் பார்த்து பயப்படுவதாக சொன்னார்கள்.

காங்கிரஸ் அதிகார பகிர்வு வேண்டும் என, சொல்கிறது. திருமாவளவன் ஏற்கனவே சொல்லிவிட்டார். கம்யூனிஸ்டுகள், உழைப்பாளர்கள் என சொல்லிவிட்டு தற்போது



பெட்டி பாம்பாய் அடங்கிவிட்டனர். தேர்தல் நெருங்கும்போது தேசிய ஜனநாயக கூட்டணி வலுப்பெறும். இண்டியா கூட்டணி உதிரும்.

தம்பி விஜய் இரண்டு மூன்று நாட்களாக பெரிய கூட்டத்தை கூட்டுகிறார். அவரிடம் ஒன்று மட்டும் சொல்லிக் கொள்கிறேன். அவருக்கு ஸ்கிரிப்ட் எழுதி தரும் தம்பியிடம் சரி பார்த்து எழுதிக்கொடுக்க கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் மீனவர்களை பற்றி சொல்லும்போது, பிரதமர் வந்த பிறகு 3700 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். பாஜக ஆட்சிக்கு வந்த பிறகு தூக்கு தண்டனையிலிருந்து மீனவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர். இதுவரை யாரும் உயிரிழக்காமல் பாதுகாத்து இருக்கிறது பாஜக.

விஜய் வசனகர்த்தாவை மாற்றவேண்டும். 75 ஆயிரம் ரயில் பெட்டி பெரம்பூர் தொழிற்சாலையில் வந்தே பாரத் ரயிலுக்காக தயாரிக்கப்பட்டிருக்கிறது. ரயில்வே பற்றி தம்பி சொல்கிறார். அவரது ஸ்கிரிப்ட் சரி பார்க்க வேண்டும். அவருக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் எங்களைப் போல் உள்ளவர்களிடம் சரித்திரம் குறித்து கேட்டுக்கொள்ளலாம். திடீரென அரசியலுக்கு வந்தவுடன் என்னவென்று புரியாமல் உள்ளார். அவர் கூட்டத்துக்கு வருபவர்களும் அவரைப் பார்க்க வருகின்றனர். வாக்களிக்க வரவில்லை.

ஒரு விஷயத்தில் நான் விஜயுடன் உடன்படுகிறேன். முதல்வர் வெளிநாட்டுக்கு முதலீடு ஈர்க்க செல்கிறாரா, முதலீடு செய்ய செல்கிறாரா என்பதை ஏற்றுக்கொள்ளலாம். அவர் திமுக எதிர்ப்பை தீவிரபடுத்த வேண்டும். திமுகவை நிச்சயம் வீட்டிற்கு அனுப்ப வேண்டும். ஜிஎஸ்டியில் மக்கள் பலன் பெறப்போகிறார்கள். ஆனால் கலர் கலராக சட்டை போட்டுக் கொண்டு ஷூட்டிங் நடத்துகின்றனர். ஒரே வித்தியாசம் என்னவென்றால் விஜய் அரசியலுக்கு வந்து விட்டார். அரசியலில் இருந்த முதல்வர் ஷூட்டிங்கிற்கு சென்றுவிட்டார்.

மாணிக்கம் தாகூர் குறித்து விருதுநகரில் கேளுங்கள் அவர் எந்தளவுக்கு மக்களுக்கு உதவி செய்கிறார் என்பது தெரியும்.

எனக்கு வேர்த்தால் கூட கர்சிப் தராதீர்கள் என, சொல்லிவிட்டேன். ஏனென்றால் அதைத் துடைக்க முகத்தை மறைத்தால் கூட கேமரா முன்பு முகத்தை மறைத்து விட்டதாக சொல்வார்கள் என்பதால் சொல்கிறேன். செல்வப் பெருந்தகை எங்களைப் பற்றி சொல்வதற்கு முன்பு அவர்களின் நிலை என்ன என்பதை தெரிந்து கொள்ளவேண்டும்.

செல்வபெருந்தகை, திருமாவளவன் ஸ்டாலினை பார்ப்பர். அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி அமித்ஷாவை பார்த்தால் குறை சொல்கின்றனர். கூட்டணி என இருந்தால் கட்சி தலைவர்கள் பேசத் தான் செய்வார்கள். இதில் என்ன ஆச்சரியம் உள்ளது. நானும் தம்பி விஜய பாஸ்கரும் விமான நிலையத்திற்குள் பேசினோம். அதுபோல் இரண்டு கூட்டணி கட்சித் தலைவர்கள் பேசுவது இயல்பு.

இதை ஏன் செயற்கையாக எடுத்துக் கொள்கிறீர்கள் என்றால், எதிர் கூட்டணியை பார்த்து பயந்துள்ளனர். பிரச்சாரத்தின்போது, விஜய் முருகன் வேலை கையில் வாங்கும்போது, காலணியை கழற்றாமல் வாங்கினார். ஆரம்பகாலம் என்பதால் அவருக்கு தெரியவில்லை. மக்கள் உணர்வை அவர் புரிந்து கொள்ளவேண்டும். தொண்டர்களுக்கும் அவர் சொல்லிக் கொடுக்கவேண்டும். இவ்வாறு கூறினார்.

# தேர்தலில் திமுகவுக்கும், தவெகவுக்குமே போட்டியென விஜய் அறியாமல் பேசுகிறார் - ஆர்பி. உதயகுமார்

மதுரை, செப்.22-

மகாளய அமாவாசையை யொட்டி, மதுரை தெப்பக்குளத்திலுள்ள முத்தீஸ்வரர் கோயிலில் ஏற்பாடு செய்து இருந்த அன்னதான நிகழ்வில் அதிமுக முன்னாள் அமைச்சர் ஆர்பி.உதயகுமார் குடும்பத்தினருடன் பங்கேற்று பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினார்.

இதைத்தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: தமிழகத்தின் உண்மை நிலவரத்தை திமுக அரசு மறைக்கிறது. பங்காளி சண்டை, பகையாளியை தடுப்பதற்காகத்தான் திமுக உள்ளதா?, தமிழக மக்களின் முதுகெலும்பை உடைத்துவிட்டு தலை குனியவிடமாட்டேன் என்று என்ன சொல்வது.

மத்திய அரசுடன் இணைந்து தமிழகத்திற்கு ஒரு சல்லி காசையும் திமுக பெற்றுத் தரவில்லை. திமுகவுக்கு தேவை என்றால் பிரதமருக்கு வெண்குடை பிடிப்பதும், தேவையில்லை என்றால் கருப்பு பலூன் பறக்க விடுவதும் வழக்கமான ஒன்றாகிவிட்டது.

மத்திய அரசுடன் இணைந்து தமிழகத்துக்கு திமுக எந்த ஒரு திட்டத்தையும் கொண்டு வரவில்லை. ஜனநாயக நாட்டில் யார் வேண்டுமானாலும் கட்சி தொடங்கலாம். மக்களிடம் ஆதரவை கேட்கலாம், தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகளுக்கு பல்வேறு தியாக வரலாறு உள்ளது. இந்த தியாக வரலாற்றுடன் அதிமுக தேர்தல் களத்தை சந்திக்கிறது. அதனால் தான் அதிமுகவிற்கு நிரந்தர வாக்கு வங்கி உள்ளது. விஜய் பரீட்சை எழுதாமல் பாஸாகி விடுவேன் எனச் சொல்கிறார்.

அவர் பரீட்சை எழுதட்டும். பாஸ் ஆவாரா, இல்லையா என, பொறுத்திருந்து பார்ப்போம். அரசியல் களத்தில் விஜய் தற்போது தான் படித்துக் கொண்டிருக்கிறார். திமுகவிற்கும், தவெகவிற்கும் போட்டியென விஜய் அறியாமல், தெரியாமல் பேசுகிறார். தமிழக அரசியல் களத்தில் திமுகவிற்கு மாற்று அதிமுக. அதிமுகவிற்கு மாற்று திமுக என்பது காலம் காலமாக உள்ள வரலாறு.

அதிமுக மட்டுமே திமுகவை வீழ்த்தும் சக்தியாக உள்ளது. எம்ஜிஆரை பேசாமல் யாரும் பொது வாழ்க்கையை தொடர முடியாது. அதிமுக பாஜக கூட்டணியில் டெல்லியில் எடுக்க வேண்டிய முடிவுகளை அமித்ஷா எடுப்பார். தமிழகத்தில் எடுக்க வேண்டிய முடிவை பொதுச்செயலாளர் பழனிசாமி எடுப்பார்.

அமித்ஷாவுடன் பேசியது பொதுச்செயலாளர் பழனிசாமிக்கும், ஆண்டவனுக்குமே தெரியும். முன்னணி சினிமா நட்சத்திரங்கள் கடை திறப்பு விழாவில் கூட்டம் கூடுகிறது, எல்லா நேரத்திலும் தலைமையாசிரியர் பதில் சொல்ல முடியாது. திமுகவை எதிர்ப்பதில் தலைமையாசிரியர் பழனிசாமி உறுதியாக உள்ளார். இவ்வாறு ஆர்பி உதயகுமார் கூறினார்.

# தூத்துக்குடியில் ரூ.30 ஆயிரம் கோடியில் கப்பல் கட்டும் தளங்கள்: தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தகவல்

சென்னை, செப்.22-

தூத்துக்குடியில் தலா ரூ.15 ஆயிரம் கோடி என ரூ.30 ஆயிரம் கோடி முதலீட்டில், கப்பல் கட்டும் தளங்கள் அமைக்க கொச்சின் ஷிப்யார்டு மற்றும் மசகான் டாக் ஷிப் பில்டர்ஸ் நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாக தொழில்துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தெரிவித்தார்.

இதுகுறித்து, சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: திமுக ஆட்சியில் தொழில்துறை வரலாறு காணாத வளர்ச்சிகண்டுள்ளது. பல தொழில்பிரிவுகள், குறிப்பாக எலெக்ட்ரானிக்ஸ், வாகன உதிரிபாகங்கள், காலணி தயாரிப்பு போன்ற தொழில் பிரிவுகளில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.

முதல்வரை பொறுத்தவரை, பாரம்பரிய துறைகள் மற்றும் புதிய துறைகளில் நாம் கால்பதிக்க வேண்டும், வளர்ச்சி காண வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார். இதற்கிணங்க வெளிநாட்டு பயணங்கள், இங்கு நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாடுகளில் செமிகண்டக்டர் போன்ற புதிய தொழில் பிரிவுகள் மற்றும் கப்பல் கட்டும் துறையில் அதி முக்கியத்துவம் இருப்பதை அறிந்துள்ளோம். நாம் கப்பல் கட்டும் துறையில் நீண்ட காலமாக உள்ளோம்.

இதன் வாயிலாக, தற்போது தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனம் மற்றும் சிஎஸ்எல் எனப்படும் கொச்சின் ஷிப்யார்டு லிட் நிறுவனம் இடையில் ரூ.15 ஆயிரம் கோடிக்கான முதலீட்டு ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.



அதேபோல், மசகான் டாக் ஷிப் பில்டர்ஸ் நிறுவனத்துடனும் ரூ.15 ஆயிரம் கோடிக்கான ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

தூத்துக்குடியில் அமையும் இந்த கப்பல் கட்டும் தளங்களில் சிஎஸ்எல் நிறுவனத்தில் 4 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும், 6 ஆயிரம் பேருக்கு மறைமுகமாகவும் என 10 ஆயிரம் பேருக்கும், மசகான் நிறுவனத்தில் 5 ஆயிரம் பேருக்கு நேரடியாகவும், 40 ஆயிரம் பேருக்கு மறைமுகமாகவும் என 45 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகும்.

இதுதவிர, பல்வேறு முக்கியமான சர்வதேச நிறுவனங்களின் அதிகாரிகள் விரைவில் தமிழகம் வர உள்ளனர். அப்போது கூடுதல் தகவல்கள் வெளியாகும். இந்த இரு முதலீட்டு திட்டங்களும் தூத்துக்குடி துறைமுகத்தை ஒட்டியே அமைய உள்ளன. இதுதவிர, மற்ற துறைமுகங்கள் தொடர்பான திட்டங்களுக்கும் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.

தூத்துக்குடியில் நடைபெற்ற நிகழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசும்போது, கடல்சார் போக்குவரத்து, உற்பத்தி கொள்கை உருவாக்கப்படும் என்றும் அறிவித்திருந்தார். அந்த கொள்கை தொடர்பாக, நாங்கள் தற்போது பல்வேறு நிறுவனங்களுடன் பேசி வருகிறோம். தமிழகத்தில் ஒரு முதலீடுதிட்டத்துக்கு ஒப்பந்தம் போட்டதும், தலைமைச்செயலர் தலைமையிலான கமிட்டி ஆய்வு செய்கிறது. திட்டத்துக்கான ஒப்புதல் எளிமைப்படுத்தப் பட்டுள்ளதால்தான், உலகளவில் தொழில் செய்வதில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது.

தேசிய நலன் என்று வரும்போது முதல்வர் எப்போதும் அரசியல் செய்ய விரும்ப மாட்டார். மத்திய அரசுக்கு தேவையான ஒத்துழைப்பு அளிப்போம். கப்பல் கட்டுதல் என்பது இந்தியாவுக்கு மிகவும் முக்கியம். இன்னும் பல கப்பல் கட்டும் நிறுவனங்கள் வர உள்ளன. உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை இந்தாண்டில் நடத்துவது குறித்து ஆலோசித்து வருகிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# காளையார்கோவிலில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா





காளையார் கோவில், செப்.22-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் ஒன்றியத்தில் உள்ள புனித வின்சென்ட் தே பவுல் சபை புனித அருளானந்தர் கிளைச் சபையின் ஆண்டு விழா புனித அருளானந்தர் ஆலய வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது. கிளை முதன்மை பணியாளர் ஆரோக்கியசாமி தலைமை வகித்தார். ஆன்மீக ஆலோசகர் பங்குத்தந்தை சேசு முன்னிலை வகித்தார். கிளை துணை பணியாளர் ஆரோக்கிய லூயிஸ் லெவே வரவேற்றார். கூட்ட அறிக்கை கிளை முதன்மை பணியாளர் ஆரோக்கியசாமி வாசித்தார். கிளைப் பொருளாளர் பால்ஜோசப் வரவு செலவு அறிக்கை சமர்ப்பித்தார். உதவி பங்குத்தந்தை நிக்கோலஸ் தத்துக் குடும்பங்களுக்கான உதவிகள் வழங்கி ஆசிர் வழங்கினார். மத்தியசபை செயலாளர் அலெக்ஸாண்டர் மத்தியசபை பொருளாளர் அமிர்தசாமி வட்டார சபை முதன்மை பணியாளர் அருள் வட்டார சபை செயலாளர் அருள்தாஸ் உச்சாணி கிளை முதன்மை பணியாளர் மரியகண்ணு வாழ்த்துரை வழங்கினர். மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கி மத்தியசபை முதன்மை பணியாளர் பெர்னாட்ஷா சிறப்புரையாற்றினார். 80 க்கும் அதிகமான பயனாளிகளுக்கு புத்தாடைகளை வின்செந்திய உறுப்பினர்கள் வழங்கினார்கள். தொழில் வளர்ச்சி நிதியாக நலிந்த தொழிலாளிக்கு ரூபாய் 20000 வழங்கப்பட்டது. நலத்திட்டங்கள் மூலம் இரண்டு லட்சத்திற்கு அதிகமான உதவிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. தணிக்கையாளர் டேனியல் ஜோசப் துணை உறுப்பினர்கள் உபகாரிகள் நன்கொடையாளர்கள் பயனாளிகள் மாணவ மாணவிகள் பெற்றோர்களுக்கு நன்றி கூறினார். திட்ட அலுவலர் செல்வம் உறுப்பினர்கள் லூர்துராஜ் ஐந்துகாயம் சகாயராஜ் லூயிஸ்லெவே கஸ்பார் அந்தோணிசாமி அலெக்ஸாண்டர் சூசைஅருள் புஷ்பம் குழந்தைதெரஸ் ரீட்டாமெர்சி லீமா ராபர்ட் இளங்கோ ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.






# சிவகங்கையில் உலக எழுத்தறிவு தின கருத்தரங்கம்



சிவகங்கை, செப்.22-

சிவகங்கை மாவட்ட தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பாக அறிவொளி சங்கமத்தின் உலக எழுத்தறிவு தின கருத்தரங்கம் சிவகங்கை மாவட்ட ஆட்சியரகம் அறிவொளி நினைவுத்தூண் அருகில் சிறப்பாக நடைபெற்றது. தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநில பொதுச் செயலாளர் முகமது பாதுஷா தலைமையில் எழுத்தறிவு உறுதிமொழி ஏற்பு நிகழ்வை தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி எழுத்தறிவு உறுதிமொழி கூற அறிவொளி சங்கமத்தினர் அனைவரும் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர். தொடர்ந்து அறிவொளி சங்கமத்தினர் பறை இசைக்க பேரணியாக மாயா மகாலுக்கு சென்று உலக எழுத்தறிவு தின கருத்தரங்கில் கலந்து கொண்டனர். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டத் தலைவர் கோபிநாத் விழாவிற்கு தலைமை வகித்தார். அறிவொளி சங்கம இணை ஒருங்கிணைப்பாளர் முருகானந்தம் வரவேற்புரையாற்றினார். அகில இந்திய மக்கள் அறிவியல் கூட்டமைப்பின் மேனாள் பொதுச் செயலாளர் பேராசிரியர் ராஜமாணிக்கம் துவக்கவுரையாற்றினார். அறிவொளி சங்கம ஒருங்கிணைப்பாளர் பாலசுப்பிரமணியன் நோக்கவுரையாற்றினார். அன்றாட வாழ்வில் பாலின சமத்துவம் என்ற அமர்விற்கான கருத்தரங்கிற்கு மணிமேகலை தலைமை வகித்தார். அட்வகேட் செல்வ கோமதி கருத்துரை யாற்றினார். நம்பிக்கையும் மூடநம்பிக்கையும் என்ற அமர்விற்கான கருத்தரங்கிற்கு மோகன சுந்தரம் தலைமை வகித்தார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மேனாள் மாநில தலைவர் முனைவர் தினகரன் கருத்துரை யாற்றினார். தமிழ்நாடு அறிவியல் இயக்க மாநில பொதுச்செயலாளர் முகமது பாதுஷா நிறைவுரை யாற்றினார். ஏலம்மாள் நன்றி கூறினார். அறிவொளி சங்கம நிர்வாகிகள் ராஜேந்திரன் திரவியம் பாஸ்கரன் மெய்யப்பன் செல்வராஜ் பாண்டி பிரம்மன் முருகேசன் சிங்காரம் விநாயகமூர்த்தி கோவிந்தசாமி சீமைச்சாமி மெய்ஞானமூர்த்தி சின்னழகு தமிழ்கனல் முத்துக்கிருஷ்ணன் மாணிக்கவள்ளி தமையந்தி ஜெயந்தி கிருஷ்ணவேணி அன்புநாதன் மணவாளன் ராஜாசரவணன் செல்வசுந்தரி ரோஹினி ஜெயலலிதா பூமயில் மணிமேகலை பிலோமீனாள் பாண்டிமீனாள் ஜீவானந்தம் ஆறுமுகம் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பான ஏற்பாட்டினை செய்திருந்தனர்.அறிவொளி தொண்டர்கள் குடும்பத்துடன் கலந்துகொண்டு தங்களின் அனுபவ பகிர்வை பகிர்ந்துகொண்டனர்.



■ வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வே. இரா. சுப்புலெட்சுமி, அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினர் ஏ.பி.நந்தகுமார், நேற்று அணைக்கட்டு வட்டம். பொய்கை அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமை தொடங்கி வைத்து. முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கு அடையாள அட்டைகளை வழங்கினார்கள். இந்நிகழ்வின்போது அணைக்கட்டு ஒன்றியக்குழுத் துணைதலைவர் சித்ரா குமராபாண்டியன், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார். மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பரணிதரன், இணை இயக்குநர் (மருத்துவ பணிகள்) மரு.பியூலா ஆக்னஸ், பொய்கை ஊராட்சி மன்ற தலைவர் வெங்கடேசன் உட்பட பலர் உடனிருந்தனர்.









■ விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி தாலுகா அரியனேந்தல் கிராமத்தில் கண்மாய் கரையில் காவை தென் இந்திய கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்கள் முன்னேற்ற நலச் சங்கத்தின் சார்பாக 1 கிலோ மீட்டர் தூரத்தின் கரையின் மேல்பகுதி மற்றும் அடிப்பகுதியில் 1001 பனைமர விதைகள் விதைக்கப்பட்டது இந்நிகழ்ச்சிக்கு மாநில பொதுச்செயலாளர் முருகேசன் கலந்துகொண்டு விதைகள் விதைக்கப்பட்டு விழாவில் கலந்து கொண்டவர்களுக்கு தொழிற்சங்கத்தின் சார்பாக சான்றிதழ் வழங்கினார் இவ்விழாவில் மாவட்டச் செயலாளர் வாசு, நகர துணைத்தலைவர் பாலமுருகன், நரிக்குடி ஒன்றிய செயலாளர் கணேசன்,பேய்குளம் கிளை மகளிர் அணி தலைவி மாரீஸ்வரி, கணினி இயக்குனர் மாரிச்சாமி, சமூக ஆர்வலர் கருப்புபாண்டி, ஸ்ரீதேவி மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கொடைக்கானல் வெள்ளி நீர்வீழ்ச்சி, நட்சத்திர ஏரி பகுதியில் கட்டப்பட்ட

# பொது கழிப்பறையை திறப்பதற்கு நல்ல நேரத்திற்காக காத்திருக்கும் நகராட்சி நிர்வாகம்




கொடைக்கானல், செப்.22-

மலைகளின் இளவரசி என்று அழைக்கப்படும் உலகப்புகழ் பெற்ற சுற்றுலா தலமான கொடைக் கானலுக்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர், இந்நிலையில் கொடைக்கானல் சுற்றுலா தளங்களை மேம்படுத்தும் விதமாக தமிழக அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வரும் சூழலில், சுற்றுலா பயணிகளின் அடிப்படை தேவையான கழிப்பறை வசதி செய்து கொடுக்கும் வகையில் மத்திய, மாநில அரசு நிதியில் இருந்து வெள்ளி நீர்வீழ்ச்சி ,நட்சத்திர ஏரி உள்ளிட்ட பகுதிகளில் சுற்றுலா பயணிகள் வசதிக்காக சுற்றுலாப் பயணிகள் பயன்பெறும் வகையில் கொடைக்கானல் நகராட்சி நிர்வாகம் கழிப்பறை கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பந்தம் விடப்பட்டு தற்போது கட்டிடப்பணி முடிந்துள்ள நிலையில். அதனை பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் பயன்பாட்டுக்கு வழங்கப்படாமல் தற்போது கழிப்பறை கட்டிடங்களை பூட்டி வைத்து திறப்பதற்கு நல்ல நேரம் கிடைக்காமல் கொடைக்கானல் நகராட்சி அதிகாரிகள் நல்ல நேரத்திற்காக காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக வார இறுதி நாட்களில் மற்றும் விடுமுறை நாட்களில் கொடைக்கானலில் கூட்டம் அதிகம் வரும் நேரங்களில் பெண்கள் குழந்தைகள் ,முதியோர் உள்ளிட்ட சுற்றுலா பயணிகள் இயற்கை உபாதைகளை கழிப்பதற்கு கழிப்பறையை தேடி அலைமோதும் அவல நிலை ஏற்பட்டுள்ளது .இதுகுறித்து மாவட்ட உயர் அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்து புதிதாக கட்டப்பட்டு பூட்டி வைக்கப்பட்டுள்ள கழிப்பறை கட்டிடங்களை திறந்து சுற்றுலா பயணிகள் பயன்பாட்டுக்கு கொண்டுவர வேண்டும் என்று சுற்றுலா பயணிகள் கோரிக்கை வைக்கின்றனர்.



# வங்கக்கடலில் வரும் 26, 27 தேதிகளில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவாகக்கூடும்:வானிலை ஆய்வு மையம் தகவல்

சென்னை, செப்.22-

தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களின் மேல், ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக, வடதமிழகத்தில் ஒருசில இடங்களிலும், தென்தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். மேலும் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் 7 நாட்கள் லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்பு. அதேபோல் வட தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரடைந்துள்ளது. சென்னையில் 2 நாட்கள் நகரின் ஒரு சில இடங்களில் இடி, மின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளது. மேலும் தென்மேற்குப் பருவமழையின் ஒட்டுமொத்த அளவு இயல்பான அளவை விட 5 சதவீதம் அதிகரித்து, 29.5 செமீ ஆகப் பதிவாகியுள்ளது. இது இயல்பை விடக் குறைந்து காணப்பட்ட மழை அளவை மீட்டெடுத்துள்ளது. சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம் மற்றும் புதுச்சேரியில் தொடர்ந்து மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. மேலும், அக்டோபர் மாதம் தொடங்கவிருக்கும் வடகிழக்குப் பருவமழை இயல்பை விட அதிகமாக இருக்கும் என வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. செப்டம்பர் 26, 27 தேதிகளில் வங்கக்கடலில் புதிய காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதால், தமிழகத்தில் வெப்பத்தின் தாக்கம் குறையக்கூடும் என வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் தாம்பரத்தில் நடைபெற்ற கூட்டத்தில்

# பேறிஞர் அண்ணாவின் கொள்கைகளையும், கோட்பாடுகளை கடைபிடித்து மக்களுக்கு சேவையாற்றுவது கழகமே கழக வர்த்தக அணி செயலாளர் முன்னாள் அமைச்சர் சி.த.செல்லபாண்டியன் பேச்சு

செங்கல்பட்டு, செப்.21-

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் தாம்பரத்தில் நடைபெற்ற பேரறிஞர் அண்ணாவின் 117வது பிறந்தநாள் விழா கூட்டத்தில் பேரறிஞர் அண்ணாவின் கொள்கை களையும், கோட்பாடுகளை கடைபிடித்து மக்களுக்கு சேவையாற்றுவது கழகமே என்று கழக வர்த்தக அணி செயலாளர் முன்னாள் அமைச்சர் சி.த.செல்ல பாண்டியன் பேசினார்

பேரறிஞர் அண்ணாவின் 117வது பிறந்தநாளை யொட்டி செங்கல்பட்டு மேற்கு மாவட்டக் கழகம் சார்பில் தாம்பரம் சண்முகம் சாலையில் மாபெரும் பொதுக்கூட்டம் தாம்பரம் மத்திய பகுதி கழகச் செயலாளர் எல்லார் செழியன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு செங்கல் பட்டு மேற்கு மாவட்டக் கழகச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சிட்லபாக்கம் ச.இராசேந்திரன் முன்னிலை வகித்தார். பகுதி கழகச் செயலாளர்கள் எம்.கூத்தன், ஏ.கோபி நாதன், இரா.மோ கன், எம்.தேவேந்திரன், மதுரைப் பாக்கம் எம்.பி.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் சேலையூர் ஜி.சங்கர், எஸ்.வளையாபதி, மாமன்ற உறுப்பினர் வெ.ஜெக நாதன், த.ஜெயப்பிரகாஷ், குரோம்பேட் எம்.கே.சதீஷ், ஆகியோர் வரவேற்பு ரையாற்றினர்.

# காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சரமான பா.சிதம்பரம் 80வது பிறந்த நாளை முன்னிட்டு தாம்பரத்தில் மாபெரும் மருத்துவ முகாம்

குரோம்பேட்டை, செப்.22-


செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும் முன்னாள் மத்திய அமைச்சரமான பா.சிதம்பரம் அவர்களின் 80வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது அந்த அடிப்படையில் 28வது வார்டு காங்கிரஸ் கட்சியின் குரோம்பேட்டை 28வது வார்டு தலைவர் பி.எஸ். கங்கா( எ) கங்காதரன் தலைமையில் இன்று குரோம்பேட்டையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் இந்து மிஷன் மருத்துவமனை இணைந்து மாபெரும் மருத்துவ முகாம் நடைபெற்று வருகிறது இதில் ரத்த தான முகாம் நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் 25ஆவது மாமன்ற உறுப்பினருமான ஆர்.எஸ்.செந்தில்குமார் கலந்துகொண்டு மருத்துவ முகாமை தூங்கி வைத்தனர் இதில் நூற்றுக்கு மேற்பட்டோர்கள் ரத்த தானம் அளித்துள்ளனர் இதில் நிர்வாகிகள் தீனதயாளன், விஜய் ஆனந்த், பாலு, காசிலிங்கம், ரமேஷ், தமிழ் குடிமகன், சதீஷ், ரவிசங்கர், வசீகர், கரண், கண்ணன், பஷீர் அகமது, லோகநாதன், சுதாகர் உள்ளிட்ட காங்கிரஸ் நிர்வாகிகள் உட்பட ஏராளமான கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்

# வேலூர் நறுவீ மருத்துவமனை... மருத்துவ சேவையில் மகத்தான சாதனைகள்: நறுவீ மருத்துவனை தலைவர் முனைவர். ஜி.வி.சம்பத், வரலாற்று சாதனை

வேலூர், செப்.22-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர், ஆட்சியர் அலுவலக சாலை, உலக அளவில் புகழ்பெற்ற வேலூர் நறுவீ மருத்துவமனை, மருத்துவ சேவையில் மகத்தான வரலாற்று சாதனைகள் படைத்து வருகிறது. வேலூரில், சுமார் 4 ஆண்டுகளைக் கடந்து வெற்றிகரமாக பயணித்து வரும் நறுவீ மருத்துவமனை உலகத்தில் கவனத்தை ஈர்ப்பதாக அமைந்துள்ளது. வேலூர் மற்றும் சுற்றுப்புற நகரங்கள் மற்றும் மாவட்ட மக்கள் தங்கள் மருத்துவ தேவைக்காக சென்னை உள்ளிட்ட புது நகரத்திற்கு செல்ல வேண்டிய கட்டாயத்தை முற்றிலுமாக நீக்கியுள்ளது. நறுவீ மருத்துவமனை என்று மருத்துவமனை தலைவர் முனைவர். ஜி.வி.சம்பத் என்று பெருமையாக தெரிவித்துள்ளார். பெங்களூரு சென்னை தேசிய நெடுஞ்சாலையில் உலகத்தரம் வாய்ந்த நறுவீ சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை இயங்கி வருகின்றது. சுமார் ஐந்து லட்சம் சதுர அடியில் மிகப் பிரம்மாண்டமான வடிவமைப்பில் உலக அளவில் போற்றக்கூடிய சர்வதேச அளவிலான தொழில்நுட்பத்தில் முதலிடம் பிடித்துள்ளது. நறுவீ மருத்துவமனை சர்வதேச அளவில் பல்வேறு நாடுகளிலிருந்து உலகத்தரம் கொண்ட மருத்துவ சாதனங்களுடன் 500க்கும் மேற்பட்ட படுக்கை வசதிகள் கொண்டுள்ளது. இதில் 100க்கும் மேற்பட்ட படுக்கைகள் தீவிர கண்காணிப்பு பிரிவை சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது. 250க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் மற்றும் அறுவை சிகிச்சை நிபுணர்கள் இங்கு சிறந்த சாதனைகளைப் படைத்து வருகின்றனர். 300க்கும் மேற்பட்ட மருத்துவ உதவி குழுவினர் கொண்டு சுமார் 1000 பணியாளர்களுடன் வெற்றிகரமாக பல்வேறு சாதனைகள் படைத்து, இம்மருத்துவமனை வெற்றிகரமாக இயங்கி வருகிறது.

நறுவீ மருத்துவ மனையில் உள்ள சிறப்பு மருத்துவ சிகிச்சை பிரிவுகள், 1. இருதய நோய், இருதய அறுவை சிகிச்சை மற்றும் இருதய மாற்று அறுவை சிகிச்சை, 2. நுரையீரல் நோய், நுரையீரல் அறுவை சிகிச்சை மற்றும் நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சை, 3. கல்லீரல் நோய், கல்லீரல் அறுவை சிகிச்சை மற்றும் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, 4. சிறுநீரக நோய், சிறுநீரக அறுவை சிகிச்சை மற்றும் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, 5. மகப்பேறு மற்றும் மகளிர் மருத்துவம், 6. உட் சுரப்பிகளுக்கான சிகிச்சை,7. பச்சிளம் குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை, 8. குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை, 9. எலும்பியல் நோய் மற்றும் அறுவை சிகிச்சை, 10. நரம்பியல் நோய் மற்றும் அறுவை சிகிச்சை, 11. பிளாஸ்டிக் மற்றும் மறு சீரமைப்பு அறுவை சிகிச்சை (தீ காயங்கள் உட்பட) 12. சிறு நீரியல் நோய் மற்றும் அறுவை சிகிச்சை, 13. குடல் வயிறு சம்பந்தப்பட்ட நோய் மற்றும் அதற்கான அறுவை சிகிச்சை ஆகிய மருத்துவ சிகிச்சைகள் அனைத்தையும் சூப்பர் ஸ்பெஷாலிட்டி சிறப்புமிகு தரம் கொண்ட மருத்துவமனையாக இடம்பெற்றுள்ளது. இந்த மருத்துவமனையில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்காக சிறப்பு பிரிவு ஒன்று அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது. கல்லீரல் சிகிச்சை அறுவை சிகிச்சை மற்றும் மாற்று அறுவை சிகிச்சையில் புகழ்பெற்ற எல் க்யூப் (L CUBE) மருத்துவக் குழுவுடன் நறுவீ மருத்துவமனை ஒப்பந்தம் செய்துள்ளது. இதன்மூலம் கல்லீரல் சம்பந்தமான அனைத்து சிகிச்சைகளும் சிறப்பான முறையில் மருத்துவம் அளிக்கப்பட்டு வருவது



சாதனைக்குரியதாகும்.

நறுவீ மருத்துவ மனையில் 24 மணி நேர விபத்து மற்றும் அவசர சிகிச்சை, நெஞ்சு வலி, பக்கவாதம், உள்ளிட்டவைகளுக்கான அவசர சிகிச்சை, அதி தீவிர சிகிச்சை பிரிவு, ஆகியவை மிக சிறந்த முறையில் இயங்கி வருகின்றது. மேலும், மூட்டு வலி சிகிச்சை, பல் மருத்துவம், தோல் நோய் சிகிச்சை கண் மருத்துவம் மாற்று மருத்துவம் முதியோர் சிறப்பு சிகிச்சை உள்ளிட்ட 25 மேற்பட்ட சிறப்பு மருத்துவர் வசதிகள் கொண்ட இடமாக இம்மருத்துவமனை அமைந்துள்ளது. இங்கு எக்ஸ்ரே, ஸ்கேன் அனைத்தும் பேப்பர் பிலிம் இல்லாமல் நவீன டிஜிட்டல் முறையில் எடுக்கப்படுகிறது அதிநவீன ஆடியோ மற்றும் வீடியோ வசதிகளுடன் மூன்று டெஸ்லா திறன் கொண்ட மேம்பட்ட தொழில் நுட்ப வசதியுடன் அகலமான குழாய் வடிவம் கொண்ட (MRI) scan எம் ஆர் ஐ ஸ்கேன் 128 பாகங்களாக பிரித்து காட்டும் தொழில்நுட்பம் கொண்ட சிடி ஸ்கேன் கருவி உள்ளிட்ட பல்வேறு அதிநவீன சர்வதேச அளவிலான தொழில்நுட்ப வசதிகளுடன் அமைந்துள்ளது.

மேலும், பிரான்ஸ் நாட்டின் ரோசா நிறுவன த்தால் தயாரிக்கப்பட்ட ரோசா என்ற ரோபோட் மூலமாக மூளை அறுவை சிகிச்சை சிறப்பு வசதி உள்ளது. இந்த வசதி நாட்டில் நறுதி மருத்துவமனை உள்ளிட்ட மூன்று மருத்துவமனைகளில் மட்டுமே உள்ளது. மேலும் தீர்க்க முடியாத நோய் எனப்படும் வலிப்பு நோயின் தன்மையை கண்காணித்து சிகிச்சை அளிக்கும் வசதி இங்கு தொடங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகின்றது இவ் வசதி நாட்டில் இரண்டு மருத்துவமனைகளில் மட்டுமே உள்ள நிலையில் அது ஒன்றான நம்ம நிறுவீ மருத்துவமனையாக இருப்பது நமக்கு மிகுந்த பெருமை அளிக்கிறது.

எலும்பு ஸ்திர தன்மையை சோதிக்க டெக்ஸா ஸ்கேன் வசதி மெமோ கிராம் கருவி கொண்டு பெண்களின் மார்பு புற்றுநோயை கண்டறியும் சிறப்பு பரிசோதனை மற்றும் சிறப்பு பிரிவு உள்ளிட்ட பல்வேறு சிறப்பு மருத்துவ வசதிகளை கொண்டதாக நம்ம நிறுவி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்து வமனை விளங்குகிறது. நறுவீ மருத்துவமனையில் நோயாளிகளின் நலனை மட்டுமே முன்னிறுத்தி மிகவும் எளிய கட்டணங்களுடன் நோயாளிகளுக்கு தனி கவனத்துடன் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர் என்று நறுவீ மருத்துவமனையின் தலைவர் முனைவர் ஜி.வி.சம்பத் தெரி வித்துள்ளார். இந்த மருத்து வமனை தொடங்கப்பட்டு நான்கு ஆண்டுகளில் சுமார் 7 லட்சம் புறநோயாளிகள் இங்கு சிகிச்சை பெற்று நலமுடன் திரும்பியுள்ளனர். உலக தரத்திலான தொழில்நுட்பங்களை கொண்டுள்ளதால் நறுவீ மருத்துவமனையில் இந்தியா மட்டும் என்று பல்வேறு நாடுகளில் இருந்தும் நோயாளிகள் வந்து சிகிச்சை பெற்று செல்கின்றனர். மேலும் நருவி மருத்துவமனை தொடங்கிய குறுகிய காலத்திலேயே இதயம் சிறுநீரகம் கல்லீரல் மற்றும் நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சைகளுக்கான அரசு அங்கீகாரத்தை பெற்று தற்போது இம்ம மருத்துவமனையில் உறுப்பு மாற்று சிகிச்சைகளும் வெற்றிகரமாக செய்யப்பட்டு வருகின்றன. இதன் மூலம் மக்கள் வேலூரிலேயே தங்களுக்கு தேவையான அனைத்து விதமான மருத்துவ சிகிச்சைகளை பெற முடியும். NABH எனப்படும் மருத்துவமனைகள் மற்றும் சுகாதாரத்திற்கான தேசிய அங்கீகார வாரியத்திடமிருந்து இம்மருத்துவமனை அளிக்கும் சேவைகள் அனைத்திற்கும் ஆன அங்கீகாரம் வழங்கப் பட்டுள்ளது. அதேபோன்று சி எஸ் எஸ் டி என்ற மருத்துவ உபகரணங்களை தொற்று இல்லாமல் சுகாதாரமான முறையில் பராமரிப்பு செய்து வழங்கும் துறையை அங்கீகரித்து சி ஏ எஸ் ஓ எனப்படும் மருத்துவ சேவை கூட்டமைப்பானது சான்றிதழ்களும் வழங்கியுள்ளது. டி என் பி மற்றும் டாக்டர் என் பி எனப்படும் சிறப்பு உயர் சிறப்பு முதுகலை மருத்துவ பட்டப்படிப்புகள் தொடங்குவதற்கு அனைத்து வசதிகளும் உள்ளதா என மத்திய அரசின் இந்திய மருத்துவ கழகம் மற்றும் தமிழ்நாடு அரசின் நிபுணர் குழுவினர் மருத்துவமனையில் ஆய்வு செய்து அனுமதி வழங்கியுள்ளனர். இதனைத் தொடர்ந்து மூன்று ஆண்டு முதுகலை மருத்துவ பட்ட மேற்படிப்புகளுக்கான மருத்துவம் (Anaesthesiology), கதிரியக்கவியல் (Radio diagnosis), மற்றும் மகப்பேறு மகளிர் நலன் (Obstetrics and gynecology), ஆகிய DNB critical care medicine) என்ற (Dr NB ) டாக்டர். என்.பி. படிப்புகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது என மருத்துவமனை தலைவர் முனைவர் ஜி.வி.சம்பத் தெரி வித்துள்ளார்.



# பழனியில் கஞ்சா விற்பனை செய்த இரண்டு இளைஞர்கள் கைது

திண்டுக்கல், செப்.22-

திண்டுக்கல் மாவட்டம் பழனியில் காவல்துறை கண்காணிப்பாளர் தனஜெயன் கஞ்சா போதையில் சாலையில் சுற்றும் இளைஞர்களின் எண்ணிக்கை அன்றாடம் அதிகரித்துக் கொண்டே செல்கிறதாக சமூக ஆர்வலர்கள் பலர் தங்களுடைய ஆதங்க த்தை கொட்டித்தீர்க்கின்றனர் மற்றும் கஞ்சா போன்ற போதைப் பழக்கம் உடனடியாக தடுக்கப்பட வேண்டும், போதைப் பொருட்களால் இளைஞர்களின் வாழ்க்கை பாதிக்கப்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் ரோந்து பணிகளை அதிகரித்து வந்த நிலையில் பழனி நகர் இன்ஸ்பெக்டர் மணிமாறன் தலைமையில் சப்இன்ஸ்பெக்டர் விஜய் மற்றும் காவலர்கள் காரமடை மருத்துவர் பூங்கா பகுதியில் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த போது அப்பகுதியில் கஞ்சா விற்பனை செய்த வைரவன் கோவில் தெருவை சேர்ந்த பிரபாகரன், பெருமாள் கோவில் தெருவை சேர்ந்த கோபிநாத் ஆகிய இரண்டு நபர்களை போலீசார் கண்டதும் தப்பி ஓட முயற்சி செய்தபோது சுற்றி வளைத்து பிடித்தனர் அவர்களிடமிருந்து கஞ்சாவை பறிமுதல் செய்தனர் பின்பு காவல் நிலையம் அழைத்து வந்து மேற்கொண்டு அவர்கள் யாரிடம் தொடர்பு உள்ளார்களா விற்பனைக்கு கொடுக்கப்பட்ட நபர்கள் யார் என்று விசாரணை செய்தி வந்த நிலையில் இரண்டு பேர் மீது வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலில் அடைக்கப்பட்டனர்







பழனி தாலுகா காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் தடை செய்யப்பட்ட குட்கா பொருட்களை பதுக்கிய நபர் போலீசார் கைது செய்தனர்

திண்டுக்கல், செப்.22-

திண்டுக்கல் மாவட்டம் பழனி தாலுகா காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா பொருட்கள் மொத்தமாக பதுக்கி வைத்திருந்தது டி.எஸ்.பி. தனஜெயத்திற்கு ரகசிய தகவல் கிடைத்தது. அதன் அடிப்படையில் , காவல் ஆய்வாளர் தங்கமுனி சாமி. சார்பு ஆய்வாளர் கணேசன் காவலர்கள் இளம் பரிதி. கார்த்திக் ராஜா. ராம்நாத். ஊர் காவல் படை வீரர் மதன்குமார். தலைமை யிலான போலீசார் ஆர் ஆர் மில் அருகே உள்ள கடைகள் சோதனை நடத்தினர். அப்போது, நெய்க்காரப்பட்டி சேர்ந்த முருகவேல் மகன் விக்னேஷ் என்பவரிடமிருந்து 18 கிலோ குட்கா பறிமுதல் செய்தனர் இதன் மதிப்பு 22 ஆயிரம் ஆகும் இவர் குறைந்த விலைக்கு குட்கா பொருட்களை வாங்கி வந்து, நெய்க்காரப்பட்டி பகுதியில் உள்ள கடைகளுக்கு சில்லரை விற்பனை செய்தது தெரிய வந்தது. இதுகுறித்து, பழனி தாலுகா போலீசார் , விக்னேஷின் மீது வழக்கு பதிவு செய்து நீதிமன்ற காவலில் அழைக்கப்பட்டனர்



# மகாளய அமாவாசை: ராமேசுவரம் அக்னி தீர்த்த கடலில் பக்தர்கள் புனித நீராடல்

ராமேசுவரம், செப்.22-

மகாளய அமாவாசை தினத்தை முன்னிட்டு ராமேசுவரம் அக்னி தீர்த்தக் கடலில் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் புனித நீராடினர்.

மகாளயம் என்பது புரட்டாசி மாதம் பவுர்ணமிக்கு மறுநாள், பிரதமை திதியில் துவங்கி, புரட்டாசி மாதம் அமாவாசை வரை நீடிக்கும். இந்த அமாவாசையே மகாளய அமாவாசை என்று அழைப்பர். முன்னோர்களுக்கு மகாளய அமாவாசை தினத்தன்று தர்ப்பணம் செய்வதன் மூலம் முன்னோர்களின் நல்லாசிகளுடன் சிறந்த வாழ்க்கைத் துணையும், கல்வி கேள்விகளில் சிறந்த குழந்தைகள், வீடு, விளை நிலம், பசுக்கள், தொழில் அபிவிருத்தி, ஆரோக்கியம், தீர்க்காயுள் கிடைக்கும் என்பது நம்பிக்கை. மகாளய அமாவாசைக்காக சனிக்கிழமை இரவிலிருந்தே தமிழகம் மட்டுமின்றி கர்நாடகம், கேரளம், தெலங்கானா மற்றும் ஆந்திர மாநிலங்களில் இருந்து ஏராளமான பக்தர்களும் ராமேசுவரம் வரத் தொடங்கினர்.

அமாவாசையை முன்னிட்டு ராமேசுவரம் ராமநாத சுவாமி கோயிலில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நடை திறக்கப்பட்டு ஸ்படிக லிங்க, சாயரட்சை பூஜை, கால பூஜைகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து அக்னி தீர்த்தக் கடலில் பல்லாயிரக்கணக்காண பக்தர்கள் புனித நீராடி, நான்கு ரத வீதிகளில் நீண்ட வரிசையில் காத்திருந்து கோயிலுக்குள்ளே உள்ள 22 தீர்த்தங்களில் நீராடி ராமநாத சுவாமி மற்றும் பர்வத வர்த்தினி அம்பாளை தரிசனம் செய்தனர்.

பகல் 12 மணியளவில் அக்னி தீர்த்தக் கடற்கரையில் ஸ்ரீராமர், சீதா மற்றும் லட்சுமணருடன் தங்கக் கருட வாகனத்தில் எழுந்தருளி பக்தர்களுக்கு தீர்த்தவாரி வழங்கி அருள்பாலித்தனர். இன்று இரவு ராமநாதசுவாமி கோயிலில் நவராத்திரி திருவிழாவிற்கான காப்புக்கட்டும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

தமிழ்நாடு அரசு போக்கு வரத்துக் கழகம் சார்பாக மகாளாய அமாவாசையையொட்டி, பக்தர்களின் வசதிக்காக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து 150க்கும் மேற்பட்ட சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டன. மேலும் ராமேசுவரத்தில் பல்வேறு சத்திரங்களில் சிறப்பு அன்ன தானமும் நடைபெற்றது.

# சென்னையில் பறிமுதல் செய்யப்பட்ட 4,000 மது பாட்டில்கள், ரூ.28 லட்சம் மதிப்பிலான புகையிலை பொருட்கள் அழிப்பு

சென்னை, செப்.22-

சென்னை மாநகரில் பறிமுதல் செய்யப்பட்ட ரூ.28 லட்சம் மதிப்பிலான புகையிலை பொருட்கள் மற்றும் 4,000 மது பாட்டில்கள் உணவு பாதுகாப்பு துறை, காவல் துறை அதிகாரிகள் முன்னி லையில் அழிக்கப்பட்டன.

சென்னையில் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட குட்கா போன்ற புகையிலை பொருட்களின் பயன்பாட்டை தடுக்கும் வகையில் தமிழ்நாடு உணவு பாதுகாப்பு துறை, சென்னை மாநகர காவல்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியவற்றின் சார்பில் அவ்வப்போது சோதனை மேற்கொள்ளப்பட்டு, கள



ஆய்வுகள் மூலம் தடை செய்யப்பட்ட பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்ட ஹான்ஸ், கூல் லிப், குட்கா, பான் மசாலா போன்ற புகையிலை பொருட்களையும், மதுபாட்டில்களையும் அழிக்க நீதிமன்றம் அனுமதியளித்தது.

அதனடிப்படையில், சென்னையில் சேகரிக்கப்பட்ட ரூ.28 லட்சம் மதிப்பிலான தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள், சென்னை பெருங்குடியில் உள்ள குப்பை கிடங்கில் உணவு பாதுகாப்பு துறை சென்னை மாவட்ட நியமன அலுவலர் தமிழ்செல்வன் மற்றும் காவல்துறை, மாநகராட்சி அதிகாரிகள் முன்னிலையில் மாசுகட்டு ப்பாட்டு வாரியத்தின் வழிமுறை களை பின்பற்றி நேற்று (செப் 20) அழிக்கப்பட்டது.

இதேபோல், நீதிமன்ற உத்தரவுப்படி சம்பந்தப்பட்ட காவல்துறை யினர் முன்னிலையில் ரூ.5.25 லட்சம் மதிப்பிலான 4,000 மதிபாட்டில்களும் முறையாக அழிக்கப்பட்டன.

# ரயில் நிலையங்களில் விற்கப்படும் 'ரயில் நீர்' விலை குறைப்பு

சென்னை, செப்.22-

ரயில் நிலையங்களில் விற்கும் தண்ணீர் பாட்டில் விலையை குறைத்து, ரயில்வே வாரியம் அறி வித்துள்ளது. இந்த விலை குறைப்பு நாளை முதல் அமலுக்கு வர உள்ளது.

ரயில் பயணத்தின் போது, பயணிகளின் வசதிக்காக, ரயில் நிலையங்களிலும், ரயில்களில் "ரயில் நீர்" என்ற தண்ணீர் பாட்டில் விற்பனை செய்யப்படுகிறது. ரயில் நீர் பாட்டில், இந்திய ரயில்வேயால் வழங்கப்படும் ஒரு பிராண்டட் குடிநீர் பாட்டில் ஆகும். இது பயணிகளுக்கு வசதியாக ரயில்வே வளாகத்தில் விற்கப்படுகிறது. ரயில் நீர் பாட்டில் விலை ஒரு லிட்டருக்கு ரூ.15க்கும், அரை லிட்டர் பாட்டில் ரூ.10க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இந்நிலையில், ரயில் நிலையங்கள், ரயில்களில் விற்கப்படும் "ரயில் நீர்" பாட்டில் விலையை ரூ.1 குறைத்து, ரயில்வே வாரியம் அறிவித்துள்ளது. இது குறித்து, ரயில்வே வாரியம் வெளியிட்ட சுற்றறிக்கை: ரயில் நிலையங்களில் விற்கும் ரயில் நீர் பாட்டில் மற்றும் இதர தண்ணீர் பாட்டில் விலை ரூ.1 குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி, ரயில் நீர் ஒரு லிட்டர் பாட்டில் விலை ரூ.15 ல் இருந்து ரூ.14 ஆகவும், அரை லிட்டர் பாட்டில் விலை ரூ.10ல் இருந்து ரூ.9 ஆகவும் விற்கப்பட உள்ளது. மேலும், இதர தண்ணீர் பாட்டில் விலையும் ஒரு ரூபாய் குறைக்கப்படவுள்ளது. இது நாளை (22ம் தேதி) முதல் நடைமுறைக்கு வர உள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.






■ சிவகங்கை மாவட்டம் சிவகங்கை கிளை மற்றும் சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை இரத்த வங்கி இணைந்து தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் நடத்திய 12வது மாபெரும் இரத்ததான முகாம் TNTJ மாவட்ட பொருளாளர் முகமது இஸ்மாயில் தலைமையில் நேற்று (செப்21) மஸ்ஜித் அக்ஸா தவ்ஹீத் பள்ளிவாசலில் நடைபெற்றது. இந்த இரத்ததான முகாமை மாநிலச் செயலாளர் ரபீக் முகமது தொடங்கி வைத்தனர். இந்த முகாமில் இரத்த கொடையாளர்கள் 50க்கும் மேற்பட்டோர் ர் ஆர்வமாக கலந்து கொண்டு தங்களது இரத்தங்களை தானமாக வழங்கினர். மேலும் மருத்துவர் சிந்து ஹரி தலைமையிலான மருத்துவ குழுவினர்கள் இரத்தங்களை சேகரித்தனர். இந்த முகாமை சிவகங்கை கிளை நிர்வாகிகள் காதர், நஸ்ருதீன், உமர், வருசை, கனி, அப்துல் ரகுமான், அப்ரீத் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.




## ஊரக வளர்ச்சித்துறை சங்க புதிய தோழமைகளுக்கான தொழிற்சங்கப் பயிலரங்கம்

சிவகங்கை, செப்.22-

சிவகங்கை தனியார் அரங்கத்தில் தமிழ்நாடு ஊரக வளர்ச்சித்துறை அலுவலர்கள் சங்கத்தின் 39 வது அமைப்புதின விழா கூட்டமானது நடைபெற்றது.

சங்கத்தின் சிவகங்கை மாவட்ட செயலாளர் இரா. இராதாகிருஷ்ணன் தொடக்கவுரை நிகழ்த்திட, சங்கத்தின் மாவட்டத் தலைவர் லூயிஸ் ஜோஸப் பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் சிவகங்கை வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெகன்னாத சுந்தரம் முன்னிலை வகித்திட மாவட்ட இணைச்செயலாளர்களான நா.கலைச்செல்வம், இரா. ஷகீலா, வட்டாரத் தலைவர் பா. இராஜேஷ்குமார் மாவட்ட மகளிரணி கார்த்திகைமதி, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கவிதா, சிறப்பு அழைப்பாளர் உயர்நீதிமன்ற மூத்த வழக்கறிஞர் சே. வாஞ்சிநாதன், சங்கத்தின் மாநில பொருளாளர் மா. விஜயபாஸ்கர், பொருளாளர் கரு. பெரியசாமி, உதவி பொறியாளர் சையது இபுறாஹீம், துணைத்தலைவர் பா. தனபால், செயற்குழு உறுப்பினர் ஜெ. பாஸ்கரன் , துணைத்தலைவர்கள் வேலுச்சாமி, கார்த்திக், பயாஸ் அகமது, எஸ். பழனிச்சாமி , நிர்வாகிகள் மலர்விழி, ஷேக் அப்துல்லா, சிவா, பிச்சை, மீனா, சரத்பாபு உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...

சங்கத்தின் செயல்பாடுகள் மற்றும் வளர்ச்சி, சங்க ஒற்றுமை குறித்து நிர்வாகிகள் பலரும் பல்வேறு தலைப்புகளில் பேசினர்...

நிகழ்ச்சியின் இடையே கவிஞர் வைகை தமிழ்க் கனல், வைகை பிரபா ஆகியோரது சமூகப் பாடல்கள் இடம்பெற்றது...

நிகழ்ச்சியின் இறுதியில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை அசைவ உணவு பரிமாறப்பட்டது...



## காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய திமுக நிர்வாகிக்கு ஆறுதல் கூறிய அமைச்சர் கேஆர். பெரியகருப்பன்

காளையார் கோவில், செப்.22-

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் கிழக்கு ஒன்றியக் கழகத்தின் திமுக பேச்சாளராகக் கழகப்பணிகளாற்றுபவர் மலைச்சாமி என்பவர்..

இவருக்கு சமீபத்தில் இரவு நேரம் சாலையோரம் செல்கையில் இருசக்கர வாகனம் மோதி கழுத்து மற்றும் முதுகுத்தண்டுவடம் ஆகிய பகுதிகளில் பலத்த காயம் எற்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்...

நேற்றைய தினம் நலம் காக்கும் ஸ்டாலின் எனும் அரசு நிகழ்ச்சியினை தொடங்கி வைப்பதற்காக காளையார்கோவில் வந்த மாண்புமிகு தமிழ்நாடு கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் அவர்கள் விபரங்களை கேள்விப்பட்டு மேற்படி மலைச்சாமியை சந்தித்து நலம் விசாரித்து ஆறுதல் கூறினார்...

இந்நிலையில் அமைச்சர், மாவட்டக்கழக செயலாளர் கேஆர். பெரியகருப்பன் அறிவுறுத்தலின்படி காளையார்கோவில் தெற்கு ஒன்றிய திமுக துணைச்செயலாளர் கோலாந்தி தொழிலதிபர் கோதண்டபாணி, கிழக்கு ஒன்றிய துணைச்செயலாளர் விஏஓ முத்து , அரசு ஒப்பந்ததார் ஆர். எம். எல். கருணாநிதி, கிளைக்கழக செயலாளர் ஆர். வி. எஸ். அரங்கநாதன் , சேதுமாதவன் , முன்னாள் இளைஞரணி ஜான் சந்தியாகு , மாவட்டம் சிறியூர் அழகர்சாமி ஆகியோர் மலைச்சாமி அவர்களை சந்தித்து ஆறுதல் கூறி இயன்றளவு நிதியுதவி செய்துள்ளனர்...

இதனால் மனம் நெகிழ்ந்துபோன மலைச்சாமி அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் அவர்களுக்கும், சந்தித்து ஆறுதல் கூறி நிதியுதவி செய்திட்ட கழக நிர்வாகிகள் அனைவருக்கும் தனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்...

## தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் வீடியோ கான்ஃப்ரன்சில் செயற்குழு கூட்டம்

சிவகங்கை, செப்.22-

தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் அவசர சிவகங்கை மாவட்ட செயற்குழு ஒன்றியத்தின் சிவகங்கை மாவட்ட தலைவர் க.இளங்கோவன் தலைமையில் வீடியோ கான்ஃப்ரன்சில் நடைபெற்றது. இதில் ஒன்றியத்தின் மாவட்ட செயலாளர், மு. முருகானந்தம் வரவேற்புரை ஆற்றினார், தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநில துணைப்பொதுச் செயலாளர் இரா. அருள்ராஜ் தீர்மானங்களை விளக்கி பேசினார்.

தீர்மானம் : 1

தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்ட வரலாற்றிலே 105 ஆண்டுகளை கடந்து வெற்றியுடன் பீடுநடை போட்டு வரும் பொதுசங்கமானது தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியமாகும். இச்சங்கத்திற்கு இரண்டாவது முறையாக மீண்டும் மாநிலத்தலைவராக வெற்றிவாகை சூடிய ஆற்றலரசர், ஆற்றல் பெருந்தகையார் .த.அமிர்தகுமார் முதல்முறையாக இம் மாவட்டத்தைச் சேர்ந்த கிராம நிர்வாக அலுவலர் சங்கத்தின் மாநிலத்தலைவர் (பொறுப்பு). மாநில பொதுச் செயலாளரான இரா. அருள்ராஜ் அவர்களுக்கு தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் மாநில துணைப்பொதுச் செயலாளராக தேர்ந்தெடுக்கப் பட்டமைக்கு வாழ்த்துக்களை இம் மாவட்ட செயற்குழு தெரிவித்துக்கொள்கிறது.

தீர்மானம்: 2

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பெறப்பட்ட திட்ட மனுக்கள் கடந்த 29.08.2025 அன்று திருப்புவனம் வைகை ஆற்றில் கிடந்தது தொடர்பாக திருப்புவனம் வட்டாட்சியர் அளித்த புகாரில் திருப்புவனம் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரிந்த அப்பாவி நிலஅளவை வரைவாளர் முத்துகுமரன் திருப்புவனம் காவல் துறையால் 13.09.2025 அன்று எவ்வித ஆதாரமும் இன்றி கைது செய்யப்பட்டுள்ளது அதிர்ச்சி அளிக்கிறது. கடந்த 29.08.2025 அன்று மனுக்கள் ஆற்றில் கிடந்த இடத்திற்கு முதலில் சென்ற பத்திரிகையாளர்கள் புதிய குடும்ப அட்டை, முதியோர் ஓய்வூதியம் கோரிய மனுக்களும் அங்கே கிடைத்ததாக செய்தி வெளியிட்டுள்ள நிலையில் அங்கிருந்த அனைத்து மனுக்களையும் வருவாய்த்துறையினர் கைப்பற்றி சென்றனர். பின்பு திருப்புவனம் வட்டாட்சியர் இதர மனுக்கள் குறித்த விபரத்தை உள்நோக்கத்துடன் மறைத்து நில அளவைத்துறை பராமரிப்பில் இருந்த உட்பிரிவு மனுக்கள் மட்டுமே தொலைந்ததாக புகார் அளித்தார். அதை தொடர்ந்து நில அளவை அலுவலர்களுக்கு மட்டுமே குற்றச்சாட்டு குறிப்பாணையும் வழங்கப்பட்டது. ஒருதலைப ட்சமான வருவாய்த்துறை செயல்பாட்டினை அடிப்படையாக கொண்டு காவல் துறையும், நில அளவைத்துறை அலுவலர்கள் ஒவ்வொருவரையும் விசாரனை என்கிற பெயரில் மனுக்களை ஆற்றில் தூக்கி போட்டதாக ஒத்துக்கொள்ளுமாறு மிரட்டி வந்ததாக தெரியவருகிறது. இந்நிலையில் சம்பவம் நடந்த அன்று அவ்வழியே சென்ற ஒரே காரணத்தை மட்டுமே வைத்து அப்பாவி நில அளவை வரைவாளர் முத்துக்குமரன் சட்டத்துக்கு புறம்பாக விசாரனை என்ற பெயரில் இரண்டு நாட்களாக காவல் நிலையத்தில் வைத்து ஒத்துக்கொள்ளுமாறு மிரட்டி கைது செய்துள்ளதை இம் மாவட்ட செயற்குழு மிகவும் வன்மையான கண்டிப்பதுடன் கைது செய்யப்பட்ட அப்பாவி நில அளவை வரைவாளர் முத்துக்குமரனை உடனே விடுதலை செய்யுமாறும், மேற்படி சம்பவம் தொடர்பாக, தவறு செய்த அனைத்து காவல்துறை மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்க தமிழக அரசையும்,தமிழக தலைமை செயலாளர் மற்றும் . காவல் துறை தலைமை இயக்குநர் (ஞிநிறி) அவர்களை கேட்டுக்கொள்வதென ஒருமனதாக அவசர மாவட்ட செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

தீர்மானம் : 3

இதர மனுக்களும் சம்பவ இடத்தில் கிடந்ததை காட்சி ஊடகங்கள் நேரலையாக ஒளிபரப்பிய நிலையில் இதர மனுக்களை கையாண்டு வரும் வருவாய்த்துறை ஊழியர்களை விசாரணை கூட செய்யாமல், ஒருதலைப்பட்சமாக நடந்த காவல் துறை விசாராணை மற்றும் கைது நடவடிக்கை வருவாய்த்துறை சார்ந்த உயர் அதிகாரிகளை காப்பாற்றும் நோக்கத்தை உறுதி செய்வதாக உள்ளது. ஒருதலைபட்சமான வருவாய்த்துறை மற்றும் காவல்துறையின் செயல்பாடுகளை வன்மையாக கண்டிப்பதுடன் சி.பி.சி.ஐ.டி விசாராணை செய்து உண்மை குற்றவாளிகளை கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு இம் மாவட்ட அவசர செயற்குழு ஒருமனதாக கேட்டுக்கொள்கிறது.

தீர்மானம் : 4

உட்பிரிவு மனுக்களுடன் இதர வருவாய்த்துறை மனுக்கள் கிடந்ததால் நிச்சயமாக நில அளவை பிரிவில் மனுக்கள் தொலைய வாய்ப்பில்லை என்பதாலும், இதர மனுக்குள் மற்றும் நில அளவை மனுக்களை சேர்த்து கையாள்வது வருவாய்த்துறை உயர் அதிகாரிகள் மட்டுமே என்கிற உண்மையின் அடிப்படையில் உள்நோக்கத்துடன் நில அளவை பிரிவு அலுவல ர்களுக்கு மட்டும் வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணைகளை உடனே இரத்து செய்யுமாறு, சிவகங்கை மாவட்ட ஆட்சியர், சிவகங்கை மாவட்ட நில அளவைத்துறை உதவி இயக்குநர் அவர்களை இம் மாவட்ட அவசர செயற்குழு கேட்டுக்கொள்கிறது. மேற்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இறுதியாக தினேஷ்குமார் நன்றியுரை ஆற்றினார்.







## சிவகங்கை வல்லனியில் படைப்பு ஞாயிறு மரநடும் விழா

சிவகங்கை, செப்.22-

சிவகங்கை அருகே உள்ள வல்லனி பகுதியில், படைப்பு ஞாயிறு கொண்டாட்டத்தை முன்னிட்டு மரநடும் விழா நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் வல்லனி பங்குத்தந்தை பிலிப் சேவியர் தலைமையில் சிறப்பு பிரார்த்தனை கூட்டம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து, சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் செந்தில்நாதன் மரநடும் நிகழ்வில் கலந்து கொண்டு, புவி வெப்பமாதலை தடுக்கும் விதமாக பல்வேறு வகை மரக்கன்றுகளை நட்டு வைத்தார்.

தமிழ்நாடு பல்லுயிர் பெருக்க பசுமை பாதுகாப்பு திட்டத்தின் மூலம், மகிழம், நீர்மருது, மந்தாரை, புங்கன், நாட்டு வாகை போன்ற மரங்கள் நட்டு வளர்க்கப்பட்டன. இக்கன்றுகள், சிவகங்கை வன விரிவாக்க சரகத்தின் மூலம் இலவசமாக வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமை வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கும் விதமாக நடைபெற்றது.





■ இராமநாதபுரம் சமஸ்தானம் தேவஸ்தானத்திற்கு உட்பட்ட விருதுநகர் மாவட்டம் திருச்சுழி ஸ்ரீதிருமேனிநாதர் திருக்கோயில் மகாளய அமாவாசை முன்னிட்டு சிவனுக்கு அபிஷேகம் செய்யப்பட்டது மகளாய் அமாவாசை என்பது மகாளய அமாவாசை என்பதைக் குறிக்கிறது. இது பொதுவாக புரட்டாசி மாதத்தில் வரும் அமாவாசை நாளாகும். மகாளய பட்சம் எனப்படும் 15 நாட்களின் நிறைவாக வரும் இந்த நாளில், முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்து, அவர்களின் ஆசிகளைப் பெறுவது முக்கியத்துவம் வாய்ந்த சடங்காகக் கருதப்படுகிறது. இந்தக் கோயிலில் ஏற்றப்படும் மோட்ச தீபம் விசேஷமானது. இறந்தவர்களின் திதி அல்லது அமாவாசை முதலான நாட்களில், இங்கு மோட்ச தீபம் ஏற்றினால், இறந்த முன்னோர்கள் மோட்ச கதி அடைவார்கள்; பித்ருக்களின் ஆசியும் நமக்குக் கிடைக்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாகும் மகளாய் அமாவாசை முன்னிட்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

### எஸ். டி. என். பி மகளிர் வைணவக் கல்லூரி முன்னாள் மாணவிகள் சந்திப்பு 2025

## முன்னாள் மாணவியருக்கு சாதனையாளர் விருதுகள் வழங்கப்பட்டன சிறப்பு விருந்தினர் டாக்டர் வி. சிவப்பிரியா உரை

பல்லாவரம், செப்.22-

செங்கல்பட்டு மாவட்டம் குரோம்பேட்டையில் உள்ள எஸ்.டி.என்.பி மகளிர் வைணவக் கல்லூரி, 2025 ஆம் ஆண்டு முன்னாள் மாணவிகள் சந்திப்பு நிகழ்ச்சியை செப்டம்பர் 20, 2025 அன்று நடத்தியது. இந்நிகழ்வு பல்வேறு தலைமுறைகளைச் சேர்ந்த முன்னாள் மாணவிகளை ஒன்றுசேர்த்து, கல்லூரிக்கும் அதன் மாணவிகளுக்கும் உள்ள பிணைப்பை வலுப்படுத்தும் வகையில் அமைந்தது.

இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக தடயவியல் துறை இயக்குநர் டாக்டர் வி.சிவப்பிரியா (1982-85, தாவரவியல் துறை முன்னாள் மாணவி) கலந்துகொண்டார்.






அவர் தனது உரையில், விடாமுயற்சி, நேர்மை, மற்றும் புதிய சிந்த சாதனையாளர் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்ட முன்னாள் மாணவிகள் டாக்டர் சாந்தி வி வணிகவியல் துறை (1983-1986) பேராசிரியர் உஷா அனந்தகுமார் புள்ளியியல் துறை (1985-1988) டாக்டர் ரூபா பத்மநாபன் தாவரவியல் துறை (1990-1993) சுப்புலட்சுமி சுப்பையா வணிகவியல் துறை (1993-1996) காயத்ரி ராமச்சந்திரன் வணிகவியல் துறை (1993-1996) தீபிகா ஸ்ரீனிவாசன் வணிகவியல் துறை (2003-2006) மதுமிதா ரமேஷ் வணிகவியல் துறை (2012-2015) இந்நிகழ்வில் கல்லூரியின் மேனாள் தலைவர் எஸ்.என். பட், தற்போதைய தலைவர் திருமதி மம்தா டி பட், கல்லூரி பொறுப்பு முதல்வர் எஸ்/லெப்டினன்ட் முனைவர் கே.காந்திமதி, கல்லூரியின் சுயநிதிப் பிரிவின் இயக்குனர் முனைவர் எம்.எஸ்.விஜயா, துணை முதல்வர் முனைவர் யோ.கலைவாணி மற்றும் முன்னாள் இந்நாள் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலை நிகழ்ச்சிகள், முன்னாள் மாணவிகளின் அனுபவப் பகிர்வுகள், மற்றும் மாணவியர் மற்றும் பேராசிரியர்கள் ஒருவரையொருவர் சந்தித்து உரையாடுவதற்கான வாய்ப்புகள் அமைந்தன. நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவடைந்தது. இந்தச் சந்திப்பு, எஸ்.டி.என்.பி மகளிர் வைணவக் கல்லூரிக்கும் அதன் முன்னாள் மாணவிகளுக்கும் இடையிலான வலுவான பிணைப்பை மீண்டும் உறுதிப்படுத்தியது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161